கோவை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திருமதி. இரா. சித்ராதேவி, பி.எஸ்ஸி (விவ.) எம்.பி.ஏ.,

**ந.க.எண். அ3 /2517/ 2019**

நாள்— 12.12.2019

பொருள்— பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டு தொகுதி 4–ல் அடங்கிய பணிகளில் தட்டச்சர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பணியேற்றவர்கள் – பணிவரன்முறைப்படுத்தி உத்திரவிடல்.

பார்வை— 1. சென்னை, வேளாண்மை ஆணையர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) செயல்முறை ஆணை எண். அ(பி)1.3/7551/19, நாள்— 01.03.2019.

2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அ3/2517/2019, நாள்— 05.03.2019.

------

ஆணை—

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டில் தொகுதி IV–ல் அடங்கிய பணிகளுக்கு நடத்திய போட்டித் தேர்வின்மூலம் தெரிவு செய்யப்பட்டு, பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கிட இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு வழங்கி உத்திரவிடப்பட்டு பார்வை 2–ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கப்பட்டு பணியேற்றுள்ள கீழ்கண்ட தட்டச்சர்களுக்கு அவர்கள் பணியேற்ற நாள் முதல் இப்பதவியில் பின்வருமாறு பணிவரன்முறைப்படுத்தப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

பார்வை 1–ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரையின்படி, 'சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2015–16, 2016–17 மற்றும் 2017–18 ஆம் ஆண்டில் தொகுதி 4–ல் அடங்கிய பணிகளுக்கு நடத்திய போட்டித் தேர்வுகளின்மீது நிலுவையில் உள்ள வழக்குகளின் (WP) தீர்ப்பிற்குட்பட்டது ' என்ற நிபந்தனையுடன் பின்வரும் விவரப்படி பணிவரன்முறைப்படுத்தி உத்திரவிடப்படுகிறது.

| வ. எ ண் | பெயர் மற்றும் பதவி | தற்போது பணிபுரியும் அலுவலகம் | முதன்முதலில் பணியேற்ற அலுவலகம் | முதன் முதலில் பணியேற்ற நாள் | பணிவரன் முறைப் படுத்திடும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | செல்வி.ரா.பிரியங்கா, தட்டச்சர் | வேளாண்மை உதவி இயக்குநர் (பூச்சிக்கொல்லி ஆய்வகம்), கோவை | வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) உதகை. | 13.03.2019 முற்பகல் | 13.03.2019 முற்பகல் |
| 2. | திருமதி.பி.சுதாதேவி, தட்டச்சர் | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், பொள்ளாச்சி (தெற்கு). | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், பொள்ளாச்சி (தெற்கு). | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |



மேற்படி பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் தட்டச்சர் பதவியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை தொடர் மூன்றாண்டு பணிகாலத்தில் முடிக்க வேண்டும் எனவும் இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

(ஒம்)/– ஆர். சித்ராதேவி,
வேளாண்மை இணை இயக்குநர்,
கோவை.

பெறுநர் –
மேற்படி பணியாளர்கள்.

வழி மற்றும் நகல் – வேளாண்மை உதவி இயக்குநர் (பூச்சிக்கொல்லி ஆய்வகம்), கோவை.
வழி மற்றும் நகல் – வேளாண்மை உதவி இயக்குநர், பொள்ளாச்சி (தெற்கு).
நகல் – வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல் – பணிப்பதிவேடு/உபரி–2.

/உத்திரவின்படி/

[signature] 13/12/19
ஆட்சி அலுவலர்.

13/12/19